நவமணி

உள்நாடு ரூ 1

வெளிநாடு ரூ 1½

ஆசிரியன் சி.ராம. இராமநாதன்

NAVAMANI,
(A High class Tamil Monthly)

PALLATUR, RAMNAD DT.

Vol. 1 சுக்கில, பைங்குனி. No. 3.

1102
SEP 1930

பொருளடக்கம்.

எண்.	விஷயம்.	பக்கம்.
1.	கடவுள் வணக்கம்.	65
2.	பாரதப்போர்:—(தலையங்கம்) பத்திராதிபர்.	67
3.	மணியொளி:—குறிப்பு பத்திராதிபர்.	70
4.	ஸ்தலமஞ்சரி:—திருமதி பண்டிதை அசலாம்பிகை அம்மாளவர்கள்	73
5.	தமிழும், தமிழரும்:—திருவாளர் எஸ். சோமசுந்தர பாரதியாரவர்கள், M. A., B. L.	75
6.	கனகவல்லி அல்லது கள்வர் கவர்ந்த கன்னிகை:— திரு. சி. கு. நாராயணஸ்வாமி முதலியார் அவர்கள்.	77
7.	இயற்கைத் தத்துவநூலும் சைவசமயமும்:— ஓர் (சொற்பொழிவு) திரு. இராஜேஸ்வரி அம்மாளவர்கள், B. A.	81
8.	நிர்வாகிகள் எங்கே?:—சி. ராம. ராம.	92
9.	மானேஜர் அறிக்கை.	94
10.	நூறு வயது:—பி. ஸ்ரீ ஆச்சாரியார்.	95

உள்ளூர்.

கால நிலை:—மழை அடிக்கடி பெய்து நீர்நிலையங்களெல்லாம், ஜலம் நிறைந்திருக்கிறது.

உற்சவம்:—இவ்வூர் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்பராள் உற்சவத்திற்கு சுக்கில ஆனி 8உ ஆரம்பமாகி அன்று ஸ்ரீ துர்க்கை வீதியுலாவும் 9உ வில்வமர பூஜையும் ஸ்ரீ விநாயகர் வீதியுலாவும் 10உ துவஜாரோகணஞ் செய்து அன்று முதல் 10 நாளும் பஞ்சமூர்த்திகள்காலை மாலை வீதியுலாவருவதும்வெகு சிறப்பாக விருக்கும். வீர்ச்சாமி பிள்ளை மேளமும் வேணு ரெட்டியார் பியாண்டும் சின்ன மேளம், தேவார, வேதபாராயண கோஷ்டி முதலியவைகள், வாண வேடிக்கையாவும் சிறப்பாகவிருக்கும் என தெரிகிறது.

1 SEP 1930

கடவுள் வணக்கம்.

தனத்த தந்தன தனதன தனதன
தனத்த தந்தன தனதன தனதன
தனத்த தந்தன தனதன தனதன தனதான.

உனைத்தி னந்தொழு திலனுன தியல்பினை
உரைத்தி லன்பல மலர்கொடு னடியிணை
உறப்ப ணிந்தில னொருதவ மிலனுன தருள்மாறு

உளத்து ளன்பின ருறைவிட மறிகிலன்
விருப்பொ டுன்சிக ரமும்வலம் வருகிலன்
உவப்பொ டுன்புகழ் துதிசெய விழைகிலன் மலைபோலே

கனைத்தெ ழும்பக டதுபிடர் மிசைவரு
கறுத்த வெஞ்சின மறலித னுழையினர்
கதித்தடர்ந்தெறி கயிறடு கதைகொடு பொருபோதே

கலக்கு றுஞ்செய லொழிவற அழிவுறு
கருத்து நைந்தல முறுபொழு தளவைகொள்
கணத்தி லென்பய மறமயில் முதுகினில் வருவாயே

வினைத்த லந்தனி லலகைகள் குதிகொள
விழுக்கு டைந்துமெ யுகுதசை கழுகுண
விரித்த குஞ்சிய ரெனுமவு ணரையமர் புரிவேலா

மிகுத்த பண்பயில் குயில்மொழி யழகிய
கொடிச்சி குங்கும முலைமுக டுழுநறை
விரைத்த சந்தன ம்ருகமத புயவரை யுடையோனே

தினத்தி னஞ்சதுர் மறைமுனி முறைகொடு
புனற்சொ ரிந்தலர் பொதியவி ணவரொடு
சினத்தை நிந்தனை செயுமுனி வரர்தொழ மகிழ்வோனே

தெனத்தெ னந்தென எனவரி அளிநறை
தெவிட்ட அன்பொடு பருகுயர் பொழில்திகழ்
திருப்ப ரங்கிரி தனிலுறை சரவண பெருமாளே.

தந்தனந் தனந்த தந்த
தந்தனந் தனந்த தந்த
தந்தனந் தனந்த தந்த தனதான.

சந்தனந் திமிர்ந்த ணைந்து
குங்குமங் கடம்பி லங்கு
சண்பகஞ் செறிந்தி லங்கு திரடோளும்

தண்டையஞ் சிலம்ப லம்ப
வெண்டையஞ் சலன்ச லென்று
சந்தமன் சதங்கை கொஞ்ச மயிலேறி

திந்திமிந் திமிந்தி மிந்தி
தந்தனந் தனந்த னென்று
சென்றசைந் துகந்து வந்து க்ருபையோடே

சிந்தையங் குலம்பு குந்து
சந்ததம் புகழ்ந்து ணர்ந்து
செம்பதம் பணிந்தி ரென்று மொழிவாயே

அந்தமந் திகொண்டி லங்கை
வெந்தழிந் திடும்ப கண்டன்
அங்கமுங் குலைந்த ரங்கொள் பொடியாக

அம்பகும் பனுங்க லங்க
வெஞ்சினம் புரிந்து கன்ற
அம்புகொண் டுவென்ற கொண்டல் மருகோனே

இந்துவுங் கரந்த தும்பை
கொன்றையுஞ் சலம்புனைந்தி
டும்பரன் சிலம்ப மர்ந்த குமரேசா

இந்திரன் பதம்பெ றண்டர்
தப்பயங் கடிந்து முந்த
எங்கணுங் கமழ்ந் திருந்த பெருமாளே.

1 SEP 1930

உ

எல்லாம் தெய்வச்செயல்.

'நவ மணி.'

பெற்ற தாயும் பிறந்தபொன் னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந் தனவே. [பாரதியார்]

மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு. [திருவள்ளுவர்]

மாலை 1. } பள்ளத்தூர் சுக்கில-பைங்குனி, { மணி 3.

பாரதப் போர்.

சென்ற நவமணியில் நாம் எழுதியது போலும் இந்திய மக்கள் எதிர்பார்த்ததுபோலும் மகாத்மாஜீயின் சாந்தசக்தியில் இந்தியா கட்டுண்டு பாரதப்போர் ஆரம்பிக்கப்பட்டது. முதலில் மஹாத்மா சொன்னதைப்போல் இப் போரில் ஒன்று வெற்றி அல்லது மரணம்:—அதாவது ஒன்று ஜயம் அல்லது சாஸ்வத அடிமை யாதல் என்ற இரண்டில் ஒரு முடிவே காணவேண்டி இந்தியா சுதந்தரப்போர் துவங்கிவிட்டது. இப்போர் சமுத்திரக்கரைகளிலெல்லாம் இன்று நடந்து வருகிறது. இது ஆயுதப்போர் அன்று. எவருக்கும் ஹிம்சைப் போரன்று. இரத்தச்சேதப் போரன்று. கொலைப்போரன்று. நிராயுதப்போர். அஹிம்சைப்போர். வீரப்போர். கொலைக்கே காரணமற்ற அறப்போர். நமது தமிழ் கவி ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் முன்னர் சொன்னதுபோன்று

—"புவிமிசை இன்று
மனிதர்க்கெல்லாந் தலைப்படுமனிதன்,
தர்மமே யுருவாம், மோஹனதாஸ
கரம் சந்தர காந்தி"

அத்தகைய காந்தியை அரசியல் நெறியிலே
தலைவனுக் கொண்டு புவிமிசை தருமமே
அரசியலதனிலும், பிற இயலனைத்திலும்
வெற்றிதரு மென வேதஞ் சொன்னதை
முற்றும் பேண முற்பட்டு நின்றார்,
பாரதமக்கள். இதனுற் படைஞர்தஞ்
செருக் கொழிந் துலகிலறந் திறம்பாத
கற்றோர் தலைப்படக் காண்போம்—விரைவிலே.
வெற்றி கூறுமின்; வெண்சங் கூதுமின்!

என்ற உயர்ந்த அறப்போர் துவங்கியுள்ளோம். இதனுல் கண்டிப்பாய் பெறுவது வெற்றியே.

இப் போரை சாதாரணமாக ஓர் நாடகமாகவோ, அன்றி வேடிக்கையாகவோ பிரிட்டிஷ் அரசாங்கமோ அதன் தயவை எதிர்பார்க்கும் ஏனைய மக்களோ எண்ணுவார்களே யானல் இதனிலும் அறியாமை வேறொன்றில்லை என்றே சொல்லலாம். இதை ஓர் சாதாரணக் கிளர்ச்சியாக எண்ணி இப் போரை இன்னும் பலப்படுத்துதலோ அல்லது இப்போரை தமது ஆயுதபலத்தாலோ சட்டங்களாலோ அடக்கிவிட எண்ணுதலோ கொடிது. எங்கும் எப்பொழுதும் சத்தியமே வெல்லும். ஒரு நாடு ஒரு நாட்டிற்கு எப்பொழுதும் சாஸ்வத அடிமையாக இருந்ததில்லை. இருக்கவும் முடியாது. சில நாள் தந்திரத்தினல் ஒரு நாட்டை அடிமைப்படுத்தி வைத்திருந்த போதிலும் அடிமை நாடு உணர்ச்சி பெற்றவுடன் சமரசமாக, சமாதானத்துடன் அதை விட்டுவிடுவதுதான் கௌரவமே யல்லாமல் அடிமைப்பட்டவர் மீறி தானகவே விடுதலை யடைந்தபின்னர் சமாதானம் பேசுதல் கௌரவமாகாது. இந்தியா இந்தியருக்கே சொந்தமென்பது யாவரும் நன்கறிந்ததே. அங்ஙனமிருந்தும் இந்தியா பூரண விடுதலையைக் கோருமல் எவ்வளவோ பிரிட்டிஷாரின் தயவை நாடியும் சமாதானமாகப் போகாமலிருந்த பிரிட்டிஷாருக்கு

எச்சரிக்கை செய்வான் வேண்டி ஓர் குறைந்த திட்டமான நேரு திட்டத்தையும் இந்தியா தயாரித்துக்கொடுத்தும் அதையும் தூரத் தள்ளிவிட்டு இப்பொழுது உள்ள நிலைமையே சுதந்தர நாட்டின் நிலைமை என்ற பேச்சுக்களையும் சுலபமாகப் பேசிவிட்டதால் இந்தியா சுதந்தரக் கொந்தளிப்பால் பொங்கிவிட்டது. இறைவனால் இயற்கையில் அளிக்கப்பட்ட சமுத்திர ஜலத்திலிருந்து எடுக்கப்படும் உப்புக்கு இவ்வளவு பெருத்த வரிவாங்கி நம்மைப் பரிபாலனஞ் செய்தலே சுதந்தர நாட்டின் நிலையானால் அது நமக்கு வேண்டாம். அந்த சட்டமும் அதைக் கைக்கொண்டுள்ளோரும் நமக்கு வேண்டாம் என எங்கும் இந்தியர்கள் கர்ஜ்ஜிக்கத் தொடங்கிவிட்டனர். இனியேனும் சமாதானமாக அவர்கள் கோரும் உப்புச்சட்டத்தில் சமரசம் செய்து அது போன்ற அதிக வரி விஷயங்களில் இந்தியர்களுக்குச் சாதகஞ் செய்யும் முறையைக் கைக்கொண்டு அதில் கவனஞ் செலுத்துவதுதான் நியாயமேயல்லாமல் தங்களின் குறைகளை உணர்ந்து கேட்டவர்களைப் பிடித்து சித்திரவதை செய்தல் கொஞ்சமும் நன்றன்று. ஆனால் இந்தியர்கள் இப்பொழுது சித்திரவதை செய்யப்பட்டாலும் அதையும் பொருட்படுத்தாமல் தாங்கவோ அன்றி தங்கள் உயிர் போயினும் அதையும் தியாகஞ் செய்யவோ தயாராகவுள்ள நிலைமையில் அவர்களை வாட்டி மடக்கி சிறைக்குள்ளே ஒட்டி சிறைக்கூடங்களை நிறப்பிவைக்க வைக்க ஜனங்களின் எழுச்சிதான் பெருகுமே யல்லாமல் கிளர்ச்சி கொஞ்சமும் அடங்காது. இப்பொழுது பிரிட்டிஷார் தந்திரத்துடன் நடந்துகொள்ளாது இந்தியப் போரை அடக்குமுறையால் அல்லது தங்களின் இராணுவ பலத்தால் அடக்க நிச்சயித்தால் இந்தியர் வெற்றிபெறுவது நிச்சயம்.

பிரிட்டிஷாருக்கு சாதகமாகவுள்ள மிதவாத மக்களில் பலரும் பல பத்திரிகைகளுங்கூட இப் போரை மனப்பூர்வமாக ஆதரிப்பதிலிருந்து இப் போர் நாட்டில் எவ்வளவு செல்வாக்கடைந்திருக்கிறதென்பது யாவருக்குந் தெரியாததன்று. ஜனங்களின் மனதில் கொதிப்பேற்பட்டு பலாத்காரத்தில் தேசம் இறங்கிவிடுமானால் கிளர்ச்சியும் அராஜகமும் பெருகிவிடும். அறப்போர் சமாதான முறையில் நடைபெறுதாயின் முடிவு அதுவாகவே இருக்கும். ஆனல் சாந்த சொரூபரான மஹாத்மாஜி தேசம் பலாத்காரத்திலிறங்காம

லிருக்க எத்தனைவகையான கவனங்களைச் செலுத்தவேண்டுமோ அத்தனை முறையிலேயும் மிகுந்த இராஜ தந்திரத்துடன் கவனஞ் செலுத்திவருகிறார். ஆனால் இது எங்கேனும் அத்துமீறிப்போய் விடுமானால் ஆபத்தில் கொண்டுவந்து விட்டுவிடும். அதல்லாமல் மாபெருந் தலைவர் மஹாத்மாவை பிரிட்டிஷ் கவர்ண்மெண்டார் சிறைவைக்க எண்ணினாலும் அந்த நிலை ஏற்படலாம். எனவே, இராஜதந்திரத்துடன் பிரிட்டிஷார் சமாதானத்தை நாடுதலே நலம். அடக்குமுறை ஜயந்தராது. மிதவாத நண்பர்களும் இந்தசமயம் தூங்காமல் நாட்டின் தேவையை சமாதான முறையில் பூர்த்தி செய்துவைக்கும் வழியைக் கடைப்பிடிப்பார்களென எதிர்பார்க்கிறோம்.

மணியொளி.

தமிழரும் கலந்து கொள்ளுகின்றனர்.

இந்தியாவின் அறப்போரிலே ஒவ்வோர் மாகாணத்தவரும் தயங்காமல் கலந்துகொள்ளுவதையும் அவர்களுக்கு உண்டாகும் ஹிம்சைகளை ஏற்றுக் கொள்ளுவதையும் நித்திய சமாசாரப் பத்திரிகைகளைப் படிப்போர் நன்கறிவர். இந்நிலையில் நமது தமிழ் நாடும் அப்போரில் தனது கடமையைச் செலுத்த முடிவு செய்து உயர்திரு ச. இராஜகோபாலாச்சாரியாரவர்கள் தலைமையில் சித்திரை முதல் தேதியன்று 50 தொண்டர்கள் வரை பிரயாணமாகி இம் முதல் படை வேதாரண்ணியம் சென்று தனது கடமையைச் செய்யுமென்னும் செய்தி கேட்ட நாம் மிக அகமகிழ்கிறோம். எப்பொழுதும் இந்தியாவில் ஏனைய மாகாணத்தவரினும் தமிழர் பின் வாங்கினவரில்லை என்ற முறையில் தனது கடமையை ஒற்றுமையுடனும் சஹிப்புத்தன்மை, விடாமுயற்சியுடனும் செய்து நற்பேர் பெற வேண்டுகிறோம்.

அடக்குமுறை.

நாம் எதிர்பார்த்தபடி இந்தியா கவர்ன்மெண்டார் அடக்குமுறையை எங்கணும்பலமாகக் கையாண்டு இந்தியத்தலைவர்களை மனிதர்களென மதியாமலும்கூட நினைத்த நினைத்தபடி பிடித்து சிறைப்படுத்தி சட்டவரம்பை மீறி அதிகத் தண்டனை கொடுத்து வருகிறார்கள். இதனால் வீர இந்தியர்கள் ஒருகாலும் பயந்து தளர்ச்சியடைந்து விடமாட்டார்கள். ஆனால் நிச்சயம் கோழைகளும் இதனால் வீரஉணர்ச்சி பெறுவார்களென்பதை இந்தியா கவர்ண்மெண்டார் அறியவேண்டுகிறோம். இவ் அடக்குமுறையிலும் ஏனைய ஹிம்சையிலும் பயந்து வாழுங்காலம் மலையேறிப்போய்விட்டது. எனவே அதைக் கைவிட்டுச் சமாதானத்தை நாடுவதே இப்பொழுது புத்திசாலித்தனம்.

அடக்குமுறையிலும் வித்தியாசம்.

முன்னர் சிறைப்பட்ட பர்டோலிவீரர் படேலின் தண்டனையையும் கல்கத்தா மேயர் சென்குப்தாவின் தண்டனையையும் நோக்குங்கள். இப்பொழுது முதலில் உப்புசட்டத்தை மீறிய மஹாத்மா காந்தியும் அவர் தம் கோஷ்டியும் சுகமாக வேலை செய்துகொண்டிருப்பதை சும்மா பார்த்துக்கொண்டிருக்கும் அரசாங்கத்தார் ஏனைய இடங்களில் அதன் பின்னால் சென்று உப்பெடுக்கும் தொண்டர்களையும் தலைவர்களையும் கண்டபடி கைது செய்து சிறைக்குள் பூட்டுவதில் உள்ள வித்தியாசத்தைக் கவனியுங்கள். அடக்குமுறையிலும் இத்தனை வித்தியாசங்களிருப்பதன் காரணமென்ன. ஒரே குற்றத்தை முதலில் செய்யும் ஒருவரைச் சும்மா விட்டு பிறகு அதே குற்றத்தைச் செய்பவரைத் தண்டிப்பது சும்மாவல்ல அதிலும் ஏதோ ஓர் பெரும் பொருளுள்ளது. முதலில் தலைவர்களையெல்லாம் பிடித்துவிட்டுப் பிறகு மாபெருந்தலைவர் மஹாத்மாவையும் பிடித்துவிடலாம் உடனே கிளர்ச்சி அடங்கிவிடும் என்ற எண்ணம் ஓர்கால் அதில் அடங்கி யிருக்கலாம். அது மெய்யாயின் பகற்கனவாகவே அது முடியும். இச் சூழ்ச்சியாலெல்லாம் இனி இந்தியா சிக்காது இந்தியா வேண்டுவது வெற்றி அல்லது மரணமே. எனவே இம் முறை கண்டிப்பாய் வெற்றியையே அடையும்.

செட்டிமார் நாட்டார் செய்யவேண்டுவதென்ன.

இவ் இந்தியப்போரிலே செட்டிமக்கள் செய்யவேண்டுவதென்ன? முடியுமாயின் போரில்கலந்து வெற்றிபெறப் போரை நடாத்தவேண்டும். அது முடியாதாயின் அதை நடாத்துபவர்களுக்கு வேண்டிய பொருளுதவி செய்ய வேண்டும். போரில் கலந்துகொண்டு உடல், பொருள், ஆவி, மூன்றையும் அற்பணஞ் செய்தலே சிறந்த தர்மமானபோதிலும் முடிந்தவரையேனும் உதவாதிருத்தல் பெரும் பாவமாகும். எனவே, சுதந்தரப்போருக்குப் பெரும்பொருள் திரட்டி உதவும் எண்ணத்துடன் செட்டிமார் நாட்டில் திருநெல்வேலி வீரர். திரிகூடசுந்தரனூர் அவர்கள் சுற்றிவருகிறூர்கள். ஆங்காங்கு அவர்களின் புனிதமொழி கேட்டுத் தகுந்தபடி எல்லாவகையாலும் உதவி இவ் அறப்போரில் செட்டிமக்களும் இங் நாட்டில் வாழும் ஏனையோரும் கலந்துகொள்ள வேண்டுகிறேம்.

மஹாத்மாவை இழப்பதா?

இப்போரைத் துவங்கத் தமது ஆஸ்ரமத்திலிருந்து வெற்றி அல்லது மரணம் எனப் பேசிச் சென்ற காந்திஜீயின் வாக்கிற்கு இரண்டுண்டோ? அவர்களுடன் ஒன்று வெற்றிபெற இப் போரை நடாத்தி ஒன்று நாம் ஜயங்காணவேண்டும் அல்லது மஹாத்மாவை இழக்கவேண்டும். மாபெரும் வீரரை இழக்க ஒரு நாடு முனையுமா? ஒரு காரியத்தை எண்ணித் துணிவது கருமம் துணிந்தபின் பின் வாங்குதல் இழுக்கு. போரைத் துவங்கிவிட்டோம். இனி யார் எக் கேடுகெட்டால் என்ன எனச் சும்மா விருப்பது பெரும் பாவம் எனவே. எது போயினும் அவசியமில்லை என்ற ஒரே நோக்குடன் வேலைசெய்து வெற்றி காணவேண்டுவதுதான் நமது கடமையாக விருக்கவேண்டுமேயல்லாமல் கொஞ்சமும் பின்வாங்கலாகாது. வயோதிகர், பெரியார், புனிதர்; தர்மமே உருவாயவர். அவரின் வாக்கைக் காப்பாற்றித் துணைபுரியவேண்டுவது இன்றியமையாதது. அவ்வண்ணம் நாம் யாவரும் இன்று சபதஞ்செய்து ஒரு மனத்துடன் வேலை செய்தால் நாளையே வெற்றி.

ஸ்தல மஞ்சரி.

ஸ்ரீமதி. பண்டிதை அசலாம்பிகை அம்மாளவர்கள்.

திருவானைக்கா.

பொழிலாருந் திருவானைக் காவினிடைப் பொலிதருநின்
எழிலாருந் திருவுருவ மெதிர்ந்தோர்க்கும் புந்தியிரு
ளழியாம லுயிர்த்திடவு மாற்றலுள தோகருணை
ஒழியாத வகிலாண்ட வுமையேசற் றுரைத்தருளாய். (14)

நின்னெழிலைக் காணு நெடுந்தவமு நாயடியேன்
முன்ன மிழைத்தேன்கொல் முடிவுறவே—பின்னு
முகிலாண்ட வார்பொழில் சூழ்மூதானைக் காவி
லகிலாண்ட மீன்ற வனையே. (15)

திரிசிராமலை.

மாதாவாய் வந்தே மருத்துவமுஞ் செய்தநினை
வேதாவு மாலும் வியன்மறையும்—ஏதாற்
கரவறிய லாகுங்காண் கற்றோ ருளநேர்
சிரகிரியில் வாழ்செல்வ மே. (16)

அன்னையும் பிதாவு மெனமுன மௌவை
யருளிய மொழியினில் முதலாய்
அன்னையை யுரைத்த துன்னில்நின் றனையே
அகங்கொடு குறித்ததோ வினையில்
அன்னையாய் வணிகர் மகள்மகப் பெறவு
மமைந்தநின் வடிவினு மெழில்கூர்
தன்னிகர் தருமுச் சிரமலை வாழுந்
தாயுமாந் தந்தையே தனியே. (17)

(திரிசிராமலை வாயிற் கணபதி.)

எவ்வந்தியு மெவ்வேளையு மொழியாவெழில் வினையே
இவ்வந்தியி லிருகண்டொழ வெவ்வாறரு ளுவையோ
ஒவ்வுஞ்சிர கிரிவாய்தலி னிமையோர்தொழ வொளிரும்
செவ்வந்திய கணநாயக திருவார்கருணையனே. (18)

உச்சிப் பிள்ளையார்.

மூச்சி ராமலை யின்முடி வாழ்தரும்
உச்சியைங்கர னேயுய ரா ரணத்
துச்சி யாநின் னுயர்வினை நாயினேன்
இச்சை கூர் வினிதருள் வாய்கொலோ. (19)

திருக்கச்சி.

கச்சியொரு மாவிற் கனிந்திருந்த செங்கனியை
நச்சி யறம்வளர்க்கு நாயகியே—வுச்சி
யுனதாட் கமல மொளிர்வித் தருளா
லெனையாட் கொளலென் றினி. (20)

ஏகாம் பரத்தி னெழுசுடரே மெய்யடியார்
மோகாம் பரமெரிக்கு முன்னவநீ—பாகந்
தழுவு மொருபெண் தனித்தணைய மெய்யுங்
குழையுமது வென்னோ குறி. (21)

மதுரை.

பாண்டியனார் செய்தவத்துப் பைங்கிளியே பொங்குமெழில்
பூண்டொளிரு மங்கயற்கட் பொன்னே—சேண்டிகழும்
வானோர் வலம்புரிநின் வண்ணமணிக் கோயிலிது
தானோ விழிசெய் தவம். (22)

மலையத் துவஜன் மணிவிளக்கே நெஞ்சின்
நிலையற்று நெக்குருகி நின்றேன்—மலையத்து
வந்தோன் விரித்ததமிழ் வாழ்மதுரை யன்றாண்ட
செந்தேன் மொழிச்சே யிழாய். (23)

தவராஜ ரேத்துந் தடாதகையே செல்வச்
சிவராஜ தானியமர் செல்வீ—புவிராஜர்
ஆதரித்த நின்ற னடிக்கமல மென்றலையி
லேதரித்துக் கொண்டேனிவண். (24)

விண்ணரசு மோண்கயிலை வெற்பரசு முள்ளுருகப்
பெண்ணரசு பூண்ட பெரும்பொலிவே—எண்ணம்
கசிந்துருக வங்கயற்கட் கண்ணே நின் கோல
மிசைந்திருக ணுய்ந்தே னிவண். (25)

(தொடரும்.)

தமிழும் தமிழரும்.

(திரு. எஸ். சோமசுந்தர பாரதியாரவர்கள் எம். எ., பி. எல்., எழுதுவது.)

தமிழர் தாமே புறக்கணித்தும் பொருளாகக் கொள்ளாத் தமிழ் தற்காலம் நாகரீகப் பிறமொழியாளரால் எள்ளப்படின் இழுக்காமோ? 'தற் செய்யார்" தினந் தாழுநிலைமாற்ற 'அறிவறிந் தாள் வினை" மேவாத்தமிழரிடைத் தளராது தமிழணங்கு தழை வதெங்ஙன்? 'உள்ளமிலார்' உடைமையிலார்' வள்ளியமென்னுஞ் செருக்குமில்லாத் தமிழ்ப்பெரியார் பலர் தாமின்னுட்டம் மிழிவைத் தமிழ்க்கேற்றி அதனழிவு சூழுகின்றார். அறிவேற்றமடைதற்கும் திறம்பல பூத்துயர் புதிப்வாழ்வு நலமுறுதற்கும், தமிழ் மொழியே இடையூறென்றியம்புகின்றார். மேனாட்டார் பயின்றுவரும் பெளதிக நற் பல்கலையும், இறைமை நலத்துறை வகையும் தமிழ் மொழியாற் பெறவொண்ணதாய்ப் பேசுகின்றார். இந்தியரோர் இனக்குடிமை உணர்வுற்று, ஒற்றுமைபெற்றுயர்தற்கு தமிழ் வளர்த்தல் தடை யெனவு முழங்குகின்றார். மடி மடிமேல் வளர் தமிழர் மயக்கத்தால் தம் முன்னோர் குன்றாத குடிவிளக்க மறந்து தங்கள் அடிமை நிலைத்தளர் வாற்றம் முரமற்றாழ்ந்துறங்குபவர் தமக்கிறங்காதவர் கூற்றைப் பொருட் படுத்திற்றவருமன்றோ?

'குமரிமுதற் பனிவரை மட்டுருபவர்கள் ஒரு மொழி கொண் டன்றி ஒன்றார்' என்பதற்கு நியாயமுண்டோ? பலமொழிகள் நில வுதனிப்பெருநாடு பலவுலகில் ஒருமையுடன் பெருமையுமுற்றுய ரக்காண்போம். ஐக்கியமாகாணங்கள் என்னும் அழகிய பெயர் படைத்து நாகரீக உலகத்தினுயகமாய்த் தலைநிற்குந் தனியரசில் பலமொழிகளுடையாரே குடிமையாழ்வார். மேலப்புத்துலகத்தின்

வடதலையில் கானட நன்னாட்டினிலும், ஆங்கிலமும் பறங்கியுமென் றிருமொழியு மருவி வளர்ந்தியங்கக் காண்போம். வானவர் நாடென வழங்குஞ் சீனர் பழம் பெருநாட்டில் தொன்று தொட்டின்றளவும் பல்வேறு நல்மொழிகள் பயிலுகின்றார். இன்னபெரு நாடனைத்தும் நிலப்பரம்புங் குடிப்பெருக்கும் இந்தியநாடதற்கெனைத்துங் குறையாமை கொண்டுடைய வேனுமொற்றுமை நல்லுணர்வு நீதிபல வேறுமொழிபயில்வார் நிதம் வளர்க்க வளம்பெருகிச்செழுமை செறிசெருக்குடனே நிலவக்காண்போம். எனவே ஒருமையரசுயர் வுக்குத் தமிழாட்சி இன்னாட்டில் தடைதராது.

இனி, மேனாட்டிற் பௌதிகமும் புதுக்கலைகள் பலவு மெழுந் துலவு முன்னர் நிலவிநின்ற மொழிகளை அம்மொழியுடையார் புத் தறிவுப் பெருநறவுக்குதவாத கலன்களெனப் புறக்கணித்துப் புது மொழிகள் தேடியவர் வளர்க்கவில்லை. அறிவுரிமைக் குறைவிடமாய்க் கருதிவரு மிக்கால ஆங்கிலமும் ஜருமனியம் பறங்கியெனும் பாஷைகளும், புதுக்கலையும் புத்தறிவும் புகுந்தவற்றை வளஞ் செயுமுன், இலக்கணமும் இலக்கியமுமில்லாத இளஞ்சிறிய குழவி மொழி நிலையினெடுங்காலமவை நிலவியுளவாம். புத்தறிவை நத்திய அம்மொழியுடையார் தம்மொழிவுயிலறிவுதரும் புதுக்கலைகள் புகுத்தி நலம் படைத்ததல்லால், குறைமொழிமேற் கூறிவைத்துத் தம்மிழிவு பேணுபழி பூண்டாரில்லை. அவர் மொழிபோலல்லாமல் அறிவெட்டாத்தொல்லறிய பழமையோடு ஆக்கவளம் பெற்றிலங் குந் தமிழினிலே புதுக்கலைகள் தவழ்ந்திலகி வீறுபெற தமிணலமுங் கலைவளமுமொருங்கோங்குந்தகையவாகும். ஓர்ந்துணராரிழை மறுப்பர்: உண்மையிஃதே.

நாட்டினலம் வளர்ப்பதற்கு நாட்டினரெவ்வகுப்பினரு முயர்தல் வேண்டும். மொழிவளப்ப மில்லார்பால் அறிவாக்கம் உயர்வதில்லை. அகன்றாழ்ந்த அறிவொட்பம், ஆன்ற அறநூற்றிட்பம், மாண்டமனை யாக்கமொடு வேண்டுமா சேற்றமுற்று மக்கள் பெருமை பெறுவதற்கெல்லாமுன்னர் முதலுதவுவது மொழி வளப்பம். குதலைமொழி மிழற்றிய தங்குல மொழிபோல் அறிவு திரு ஆற்றல்வளம் பெருக்குதற்கும் அதன்பிறிதில்லையாகும். தொல்வளமும் இலக்கண நற்செல்விகளுமமையாது சிறுமொழிக

ளாமேனும், தம்மொழியே மதிநுட்பம் நூலாக்கம் சான்ருண்மை சமுதாய வெறுக்கையெல்லாம் தலைவிக்கத் தக்கதாகும். நாகரிக மென்றெழுந்ததெது? அன்றுள செந்தமிழுடையார் தளர்வடை யின் அவரியலின் சோர்வல்லால் மொழியிடையோர் குறையுமில்லை. தமிழ்த்தாயும், அவளீன்ற சில குதலைமொழி மாறுமன்றி நம்நாட் டுள மொழிகளனைத்தும் வடபெரு மொழியின் வழிவந்த தொடர்பு டைய அவை பயில்வார் பெரும்பாலும் பிணக்கற்ற மொழியொரு மையியலிணக்கம் பேணற்பாலார். தமிழுமுவற்றுெல்லுரிமை வட மொழியே வழுத்திநிற்கும். குறையாத வளமுடைய வடசொல் லும் பிழையாத கன்னிமையார் தமிழ் சொல்லும் எல்லையறு தொல்லை முதலின்றளவு மருவியொன்றி நிலவு நமதிந்திய நாட்டே னேதான் மொழியிதல்போல், பழிதூறு மிழிவேகம் வந்ததின்று? மொழிபேணர் முன்னேற்றமோக நலமுணரொணுதார். நாட்டின லம் நமதாக்க மிரண்டில்லை. ஒன்றேயாகும். பெருநலம் நம்மவர் வேண்டிற் றெருவெல்லாந் தமிழ் முழக்கஞ் செய்யவேண்டும்."

கனகவல்லி

அல்லது

கள்வர் கவர்ந்த கன்னிகை.

(அச்சுரிமை பெற்றது.)

கோவை திரு. சி. கு. நாராயணஸ்வாமி முதலியார் அவர்கள்.

(சென்ற மணியின் தொடர்ச்சி.)

பல ஆடவர் பெண்கள் குழந்தைகள் முதலிய ஜீவர்களைக் கொன்றும், கிராமங்களைக்கொள்ளையிட்டும், கொளுத்தியும், சிலரை வழிமறித்தடித்தும் படுகாயப்படுத்தியும், இறக்கமென்பதின்றி இமிசித்தும், கொலையையும் கொள்ளையையும் பிழைப்பாகக்கொண் டும், கருணையென்னும் சொற்பொருள் இன்னதென்றே அறியாத கல்லினும் வலிய அக்கிராதகனின் உள்ளம், பேதைவிசாலாட்சி குழந்தை கனகவல்லிகளின் சோகம் நிறைந்த தாக்கநிலைக்குச் சற்று இளகியது அப்பாதகனது மனத்துள் அன்றுதான் கருணை

என்னும் சொல் முதன்முதலாகக் குடிபுகுந்தது. தயையென்னும் சொல் உதயமாயிற்று. மனிதனுகப்பிறந்தவன், ஜீவர்களது தீன மொழிகட்கிரங்கி அருள்புரியவேண்டுவது கடமை என்பது அங்கு ரித்தது. எல்லாரும் சில நிமிஷம் அசைவற்று மௌனமாயிருந் தனர். பின்னர், அக்கள்வர் தலைவன், விசாலாட்சியைப்பார்த்து அம்மா! நீயும், இச்சிறுமியும் இனிச்சிறிதும் அஞ்சவேண்டுவ தில்லை. எங்களுடனே வசதியான எங்களது காட்டுமாளிகையில் சந்தோஷமாயிருக்கலாம். உங்களிருவருக்கும், நல்ல உண்டியும் உடையும், ஆபரணங்களும் குறைவின்றி வழங்கப்படும். என்னு டைய இவ்வுத்திரவுக்கு உடன்படாது எதிருரை கூறுவீர்களாயின் பலமாகத் தண்டிக்கப்படுவீர்கள். ஜாக்ரதை என்று கூறி தன்னு டைய வேலையாட்களை விளித்து அடே! மாடா. அடே! காடா. நமது வண்டியைப்பூட்டி இவ்விருவர்களையும். அவ்வண்டியிலேற் றிக்கொண்டு மெதுவாக நமது காட்டுமாளிகையில், வசதியான தனியிடத்தில் ஜாகைசெய்வித்து போதுமானபடி உபசரித்துவா வும் என்று கட்டளையிட்டனன். அவர்களும் அவ்வாறே அவ்விரு பெண்களையும் அழைத்துக்கொண்டு சென்றனர்.

நான்காம் அதிகாரம்.

ஓரங்கலின் பூர்வநிலைமையும்—சாப்பாட்டு விடுதியும்.

"எழுநிலை மாடங்கால் சாய்ந்துக்குக்
கழுதை மேய்பா ழாகினும் ஆகும்."

ஓரங்கல் என்பது தெலுங்கானுவின் முதன்மை நகரம் 'காகதீய கணபதிகள்" என்று பிரதித்திபெற்ற ஆந்திர அரசர்க ளுடைய தலைநகராக கி. பி. பதினுன்காம் நூற்றுண்டில் சிறப்புற் றிருந்தது அம்மட்டோ! அந்நகரம் ஆந்திரமக்களின் தாய்பாஷை யாகிய தெலுங்கு பாஷையின் அபிவிருத்திக்கு முக்கியஸ்தானமா கவும், தேசீய சூர சிரேஷ்டர்களின் நிலைக்களமாகவும், தேசாபி மானத்தைமுன்னிட்டு யுத்தகளத்தில் புறமுதுகுகாட்டி ஓடிப்ப துங்காமல் வீரத்துடனிருந்து போர்புரிந்து அதனுல் பெருகிய

இரத்த தாரைகளின் அடையாளங்களை மிகுதியாகவுடையதாக வும், வீரமே விளைத்து வாகைசூடிய ஆந்திர அரசர்களின் அரி யாசனங்கள் மேம்பட்டதாகவும் விளங்கியது. இம்மகா நகரத்திற்கு கிழக்கில் சமுத்திரக்கரையும், தெற்கில் ஐதராபாத்து ஸ்ரீசலமும், மேற்கில் வேங்கடமலேயும், வடக்கில் கோதாவரி மாகாணமும் எல்லைகள். இதனை கி. பி. 13. 14. ஆம் நூற்றாண்டுகளில் அரசு செய்த 'கணபதி தேவன்' 'ருத்திரம்மதேவி' என்ற அரசர் அரசி களுடைய காலத்தில் ஏற்பட்டிருந்த உன்னத சிறப்புக்கள் இப் பொழுது இல்லையெனினும், நாம் பிரஸ்தாபிக்கத்தொடங்கிய இக் காலத்திலுங்கூட அந்நகரம் முந்நிருந்தபெருமையின் சின்னங்களைக் காட்டிக்கொண்டிருக்கின்றன. தற்காலம் கோலகொண்டா நவாப் பின் அதிகாரத்திற்கு உட்பட்ட முக்கிய நகரமாய், ஜில்லா கலெக் டரின் பரிபாலனத்திற்கு உரியதாய், இந்துக்களுக்கும் மகமதியர் களுக்கும் தகுந்த வாசஸ்தானமாகச் சிறந்து கோலகொண்டா நவாப் வடசர்க்காருடன் நடாத்தும் வியாபாரத்திற்கு மத்தியஸ் தானமாக இருந்துவருகிறது. வசதிமிக்க இந்நகரத்திற்கு, அரசி யல் காரியமாகவும், நியாயஸ்தல விஷயமாகவும், வியாபாரத்தை முன்னிட்டும் மிகுதியான ஜனங்கள், நாலுபக்கங்களிலிருந்தும் வருவதும், போவதுமாயும், நூற்றுக்கணக்கான வழிப்பிரயாணி கள், நாள்தோறும் ஓரங்கலில் தங்கிச் சத்திரங்களில் சமையல் செய்தும் ஓட்டல்களில் பணம் கொடுத்தும் உணவருந்திச்செல் வதுமாயிருந்துவந்தனர். ஓரங்கலிலுள்ள சாப்பாட்டு விடுதிகளில் முதன்மையானதும், பெயர் சிறந்ததும் "நளபாக விலாசம்" என் னும் பெயருடையது. இவ்விடுதியின் தலைவி 'பொன்னம்மாள்' என்னும் பிராம்மண விதவை. இவ்விடுதியில் உணவுண்டவர், வேறு விடுதிகளுக்குச் செல்ல உடன்படார். காரணம்? உண்பதற்கு வரு கிறவர் ஸ்நானபானங்கள் செய்வதற்கும் உண்டபின் இளைப்பாறு வதற்கும் இரவில் உறங்குவதற்கும் இடவசதி செய்யப்பட் டிருப்பதனாலும், உண்பவர்களின் விருப்பமுணர்ந்து அதற்கேற்ப காய்கறி வகைகளை நளபாக முறைப்படி நன்றாகச் சமைத்து அன் பாகப் பறிமாறி உபசரிப்பதனாலும், கலப்பட எண்ணை கொழுப் புக்கலந்த நெய் நீர்கலந்த நீராகாரம் போன்ற புளிப்புமிகுந்த மோர். முந்தின நாள் இரவும் பகலும் மீந்த கறிவகைகள் ஆறிய பழைய சாதம் இவைகளைப் புதிதாகச் சமைத்தவைகளுடன் கல ந்தும் பறிமாறுவதும்,..............சுகாதாரமுறையில் சுத்தமான

பதார்த்தங்களுடன் சுசியாயிருந்து சமைத்துவருவோர் தகுதியறிந்து நடந்துகொள்ளுவ தினலேயாம். பொன்னம்மாள் பிறப்பகம் "பெருந்தோட்டம்" என்னும்கிராமம் வாழ்கைப்பட்டது "கோல கோண்டா" தாய் தந்தையர் வறுமையால் மிகவும் நலிந்திருந்ததினல் பொன்னம்மாளைப் பத்துவயதிலேயே ரூபாய் நானூறை மாமிசவிற்பனையாகப் பெற்றுக்கொண்டு, 75வயதுடைய கிழவன் ஒருவனுக்குக் கலியாணஞ் செய்து கொடுத்தனர். என்னே! கலியாணவிநோதம்? பத்துவயது மட்டும் நிரம்பி உலகியலுணராது விளையாட்டுக்குணமேலுங்கிய இளஞ்சிறுமியை வயதுமுற்றி, நரைமுதிர்ந்து திரைசறிந்த கிழவனுக்கு மணமுடிக்கப் பெற்ரோர் வறுமையால் உடன்பட்டாரெனினும், இம் மணம் நேர்மையா? பொருத்தமா? என்றுயோசியாமல் வேதசிரோன் மணிகளென நாப்பறையடிக்கும் வேதியர் புரோகிதர், விருத்தருக்கு விவாகம் நடாத்தி முடித்தது நியாயமாமா? பலகாரங்களோடு கூடிய நல்லுணவுக்கும் சோமன், தட்சணைகளுக்கும், ஆசைப்பட்டு செய்தகாரியமேயன்றி அறிஞர் சம்மதிக்கத்தக்க யோக்கியமான காரியமாகமாட்டாது விவாகவயதைநிர்ணயித்து அரசாங்கத்தார் சட்டம்நிறைவேற்றி அமுல் நடாத்திலன்றி நம்போலியர் எத்துணை தரம் எடுத்துக் காட்டினும், இடித்துக்கூறினும் இத்தீயதோர் தங்கொடுங் குணத்தினின்றும் திரும்பார்.

விவாகமாகி மூன்றுஆண்டுவரை பொன்னம்மாள் புக்ககத்தில் புருஷனுடன் பாட்டன் முறையில் ஒருவாறு காலங்கழித்து நான்காம் ஆண்டில் ருதுவாயினள். இத்தருணம் கணவனுக்குகாசநோய்முற்றிப் பாயும்படுக்கையுமாயிருந்தான். அதனல் ருதுசாந்தி செய்யப்படாமலிருந்தது. பலவைத்தியம் பார்த்தும் குறைபடாமல் பொன்னம்மாள் ருதுவான ஆறுமாதம் கணவன் விண்ணுலகடைந்தனன். பொன்னம்மாள் கைம்பெண்ணாய் மூலைவீட்டில் ஒதுங்கினள். பால்யவிவாகத்தினல் ஏற்படுங்கொடிய கஷ்டத்திற்கும் நெடியதுன்பத்திற்கும் இதனினும்வேறுசான்றுவேண்டா.

பொன்னம்மாள்பெற்ரோர் சுத்தவைதீக குடும்பத்தினராதலாலும், நவீன நாகரிகக் கொள்கைகளில் ஒருசிறிது கைப்பற்றினும் அதுபெருங்கேட்டுக்கு ஏதுவாம் என்ற கொள்கையும் பந்துக்கள்

இயற்கைத் தத்துவ நூலும் சைவ சமயமும்.

திரு. இராஜேஸ்வரி யம்மாள் அவர்கள் B. A.

சொற்பொழிவு.

"அன்றே யென்ற னுவியு
முடலு முடைமை யெல்லாமுங்
குன்றே யனையா யென்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோ ரிடையூ றெனக்குண்டோ
எண்டோண் முக்க ணெம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே"

இயற்கைத் தத்துவ அறிவியல்நூல், இருபதாம் நூற்றுண்டு வரை நாஸ்திகத்திற்கு முதல் நூலாய் எண்ணப்பட்டது. சென்ற நூற்றுண்டு இடையே வசித்த ப்ரொபசர் ஹக்ஸ்லி (Professor Huxley) முதலானோர் பசு, பதி, உண்டென்பதை நம்பவில்லை. எடிசனை (Edison) உனக்கு "ஆத்மா உண்டா?" என்று ஒருவர் கேட்டதற்கு, "நியுயார்க் (New York) பட்டணத்திற்கு ஆத்மா யிருந்தால் எனக்கும் ஆத்மா உண்டு" என்று சொன்னார். இவ்வாறு பத்தொன்பதாம் நூற்றுண்டு இயற்கைத் தத்துவ ஆராய்ச்சி நாஸ்திகத்தில் முடியலாயிற்று. ஆனல் இருபதாம் நூற்றுண்டு பிறந்தவுடன் யாவும் மாறலாயின. சர். ஆலிவர் லாட்ஜ் (Sir Oliver Lodge) சர். வில்யம் குரூக்ஸ் (Sir William Crookes) முதலானோர் செய்த ஆராய்ச்சிகளில் ஜடபதார்த்த வியற்கை இலக்கணத்தைச் சென்ற நூற்றுண்டில் காட்டியவாறு காட்டாமல் வேறு விதமாய்க் காட்டினர். அதாவது அணுக்கள் தூல சூக்கும நிலையே முடிவல்ல வென்றும், காரண அணுக்களே பதார்த்தவடிவிற்குக் காரணமென்றும் ஜடபதார்த்தம் எக்காலத்திலும் அழியாது, ஒன்று ஒன்றாய் மாறுமென்று முன்னிருந்த தத்துவசாஸ்திரிகள் கூறியது பொய்யென்றும் கூறிக் காரண அணுக்களின் நிலையும் குணமும் நிரூபிக்கலாயினர்.

சூக்ஷும அணுவின் கட்டிடம். Atomic Structure.

நமது நாட்டிலும். நமது முன்னோர் காலத்தில் சாக்கியம் வழங்குங் காலத்தில் உலகம் அணுக்கூட்டமென்று மொழிந்த இயற்கைத் தத்துவ சாஸ்திரிகள் பலர் இருந்தனர் என்பதைப் பிரமகீதை முதலிய

நூல்களில் காணலாம். அதே மாதிரியாக ஐரோப்பிய நாடுகளில் இத்தகைய கொள்கை பத்தொன்பதாம் நூற்ருண்டில் வழங்கியது ஆச்சரியமல்ல. இரசாயன சாஸ்திரத்தால் (Chemistry) உடைக்க முடியாதென்று நிரூபிக்கப்பட்ட சூக்கும அணுக்கள் (Atoms) ஒவவென்றும் இருபதாம் நூற்ருண்டில் ஆராயுங்கால் சூரியமண்டலத்தைச் சுழன்று ஓடும் கோளங்கள் போலும் (Solar System) இயங்குகின்றன என நிரூபிக்கலாயினர்.

அதாவது ஒவ்வொரு சூக்கும அணுவும் இடையிலே ஆண் தன்மை பொருந்திய கனத்தஓட்டமற்ற ஒரு காரண அணுவும் பெண் தன்மை பெற்ற இலேசான வெகு வேகமாக இடைவிடாது சுழன்று வருகின்ற பரமாணுக்கள் பலவுமாய் இருக்கின்றதென போர் (Bohr) என்னும் தத்துவ சாஸ்திரி நிரூபித்தார். இப் பரமாணுக்களின் சூரிய மண்டலத்தைச் சுற்றி சக்தி சொரூபமான பல அணுக்கள் சுழன்று ஓடும் என்பது நூதன ஆராய்ச்சிகளால் புலப்படுகின்றது. இவற்றுள் இச்சக்திகள் இயக்க பேதமே, வஸ்து பேதத்திற்குக் காரணமாகின்றது. ஒரு கரியின் அணுவை ஆராய்ந்தால் பெண் தன்மைப் பரமாணுக்கள் தொடர்கள் குறைவாய் விளங்கும். இரசாயன சாஸ்திரத்தில் அதேவஸ்து என்று நிரூபித்த வைரத்தின் சூக்குமஅணு இத்தகைய பரமாணுக்கள் பெருது அழுந்திய பரமாணுக்கள் பொருந்தக் காணப்படுகிறது. பரம (காரண) அணுக்கள் நிலையை மாற்றக் கூடுமெனின் வஸ்துவை மாற்றக்கூடும். ஆதலால் ஒவ்வோர் அணுவும் ஒரு பெரிய அண்டமாக விளங்குகின்றது. மணிவாசகப் பெருமான் கூறுவதாவது.

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப் பருந்தன்மை வளப்பெருங் காட்சி
யொன்றினுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
வின்னுழைக் கதிரின் றுன்னணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன் றெரியின்
வேதியன் றொகையொடு மாலவன் மிகுதியுந்
தோற்றமுஞ் சிறப்பு மீற்றொடு புணரிய" திருவாசகம்

என்பதாம்.

ஆகையால் ஒவ்வோர் அணுவும் ஒவ்வோர் அண்டமாக ஆராய்ச்சியில் விளங்குகின்றது. அது மாத்திரம் அன்று, திருநாவுக்கரசு நாயனர் திருவையாற்றிற் கண்டறிந்ததுபோல், எப்பொருளை நாம் எடுப்பினும் அது சிவசக்தி சொரூபமாக விளங்கும். நமது சூரிய மண்டலத்

தையும் அதைச்சுற்றி ஓடும் கோளங்களையும் நோக்கின் சூரியன் சிவத் தன்மையையும், பூமி முதலிய கோளங்கள் அதையடையும் சத்திகள் எனவும் எண்ணலாம். ஒவ்வொரு நக்ஷத்திரமும் ஒவ்வொரு சூரியன் எனவும் அதைப் பல கோளங்கள் சுற்றி ஓடுகின்றன எனவும் வான சாஸ்திரிகள் கூறுகிறார்கள். ஆயினும் அவை வெகுதூரத்திலிருக்கின்ற னவால், நமது இல்லத்தில் நுழையும் சூரியக்கதிரில் காணப்படும் பஞ்ச வர்ண ஜோதியுடன் விளங்கும் அணுக்கள்போல் காண்கின்றோம். இவ் வணுக்களுக்கும் நக்ஷத்திரங்களுக்கு முள்ள பேதம் ஒன்றே இவை அண்மையிலிருந்தும் அறிவிற்கு அதீதமாக இருக்கின்றன; அவை சேய்மையிலிருந்து அறிவிற்கு அதீதமாக இருக்கின்றன.

சக்தி பாய்ச்சல் சிவசக்தி—நூதன ஒளிகள்.
(Radiation & Siva Sakti:X—rays)

இனி, பரமாணுவின் சக்தியை ஆராய்வோமாக. இப்போது நூதன வைத்தியத்திலும் பயன்படும் "எக்ஸ்ரே" (X-Rays) யாவருக்கும் தெரிந்ததே. எக்ஸ்ரே என்பது பரமாணுக்களால் எழுப்பப்படும் ஒரு வகை ஒளி. ஒரு சூக்கும அணுவில் வதியும் சத்தி சொரூபமான அணுக்கள் வெகு வேகமாக ஓடுமென்பதைக் கண்டோம். அவற்றின் வேகம் $2{\cdot}5\times10^{9}$ C. M. per second அல்லது 25,000 மைல் ஒரு விநாடியில் ஓடும்.

சத்தி சொரூபமான பரமா அணுக்கள் சூக்கும அணுவிலிருந்து மின்சாரம் மோதுதலால் பிரிந்து "டங்ஸ்டன்" (Tungsten) என்னும் ஒருவித உலோகத்தில் தாக்குமாகில் எக்ஸ்ரே ஒளி உண்டாகிறது. வேறு உலோகங்களிலும் உண்டாகுமானாலும் இதைப்போல் நிலை நின்று ஒளிதராது. ஆதலால் டங்ஸ்டனையே கூலிட்ஜ்டியூப் (Coolidge Tube) முதலியவற்றில் உபயோகப் படுத்துவார்கள். இந்த ஒளியானது சூரிய ஒளிபோல் சுவர் முதலியவற்றால் மறைக்கப் படுவதல்ல. மரத் துக்குள்ளும் இரும்புக்குள்ளும் ஊடுருவிச் செல்லும். இதனாலேயே தேகத்திலுள்ள தசை, எலும்பு முதலியவற்றிலுள்ள ஒவ்வொரு பொருளையும் இவ்வொளியால் கண்ணாடிப்பெட்டிக் குள்ளிருப்பனபோற் காணலாகும். மின்சாரத்தால் எழுப்பப்படும் எக்ஸ்ரே ஒளிபோல் சில ஜட பதார்த்தங்களிலும் இத்தகைய ஒளிகளைக் காணலாமென்பது ஸர். வில்லியம்குரூக்ஸ் (Sir William Crookes) அவர்கள் கண்டுபிடித்த விஷயமாகும். இவ்வொளிகள் பலவகை. காஸ்மிக் ரேஸ் (Cosmic rays) என்று சொல்லும் சஞ்சீவி ஒளி முதல் டெத்ரேஸ் (Death Rays)

என்று சொல்லும் பெருங்காள விஷ ஒளி ஈறாக ஆல்பா (alpha rays) பீட்டா; (beta rays) காமா; (gama rays) டெல்டா; (delta rays) ரேஸ் என்று சொல்லப்பட்ட பல வகையாக உள. அவற்றுள் காமா ரேஸ் (gama rays) என்று எடுத்துக் காட்டியவை மிகவுங் கொடிய ஒளிகள். ஒரு மனிதனை அரைமணி நேரம் அந்த ஒளி தாக்குமாயின் அவன் பீமனாயிருந்தாலும் பதராகி விடுவான். உலக வழக்கில் கண் திருஷ்டியால் கல்லும் வெடிக்கும் என்பதும் இந்த ஒளியின் உண்மையாலே வந்ததெனலாம். ஆனால் இத்தகைய கொடிய ஒளிகள் வெளியில் வருவது ஏகதேசம். வந்தாலும் அவற்றின் ஆயுளும் மிகவும் சிறிதே. ஏனெனில் அண்டசராசரங்கள் முழுவதும் அரனுடைய நடனம் நிகழ்வதால், இவை முயலகன்போல் ஒடுங்கிக் கிடக்கின்றன. இக் கொடிய ஒளிகளைச் சொல்லவேண்டிய காரணம் என்னவெனில், இயற்கைத் தத்துவத்தில் கொடிய வஸ்துக்களை அழிக்க இவை ஏற்பட்டிருப்பனவாதலாலேயாம். கருணாநிதியாகிய கடவுள் துஷ்டர்களை, தான் தண்டிப்பதுமில்லை; அழிப்பதுமில்லை பாபிகள் தங்கள் பாவததால் உலகிலுள்ள துஷ்டசக்திகளை அவாவி அழிகின்றனர். திரிபுர சம்ஹாரத்திற்கு முன்பு தேவர்கள் முப்புரங்களை அழிக்க வேண்டினாரென்றும் அதற்குத் தேர் முதல் ஒவ்வொரு கருவியும் தேவர்களே அமைந்தாரென்றும், எல்லாம் அமைந்தும் எதையும் பயன்படுத்தாமல் சிவபெருமான் நகைத்துத திரிபுரத்தை அழித்தாரென்றும் புராண மூலமாகக் காண்கின்றோம். இதன் உண்மை என்னவென்று ஆராயும் பக்ஷத்தில் சிறிது சிலப்பதிகாரத்தில் வெளியாகின்றது.

“திரிபுர மெரியத் தேவர் வேண்ட
வெரிமுகப் பேரம் பேவல் கேட்ப
வுமைய வளொரு திறனாக வோங்கிய
விமைய வனாடிய கொடுகொட்டி யாடலுந்
தேர்மு னின்ற திசைமுகன் காணப்
பாரதி யாடிய வியன் பாண்டரங்கமும்”

எனக் கூறப்பட்டு இருக்கின்றது. திரிபுரசம்ஹாரத்திற்கு இன்றியமையாத கூத்து ஒன்றைக் கூத்தன் ஆடினான். ஏன் ஆடவேண்டும்? திரிபுரம் எரியுமாறும். திரிபுரங்கள் வந்தவுடன் அவற்றின் வருகையாலே இச் சக்தியை அவை ஈர்த்து ஏற்குமாறும், ஏற்றதை எரியுமாறும் இக் கூத்து ஆடினாரென்பது திண்ணம். பயனில் தொழில் பரமன் புரிவாரல்லர். ஆதலால் பாண்டரங்கக் கூத்தானது தேவர்கள் அறியாச்சக்தி ஒன்றை முன்னிலையில் எழுப்பி வைத்தது. திரிபுரம் வரவும் காந்தம்

இரும்பை ஈர்ப்பதுபோல் இச் சக்தி ஈர்க்க முப்புரங்களும் சாம்பலாயின. இக்காலத்திலே பரமன் நகைத்தார்.

திரிபுரத்தை எரிப்பதற்காக நகைத்தாரென்பது உபசரணை. கோப நகையெனின், மனிதர் குணமாம்; பரமனுக்கு ஏலாது. "துஷ்டராயின் பேய்கள் சூழ நடமாடும்." அச் சுந்தரருக்குக் கோபம் என்பது பொருந்தாது. இவர் சத்துவ மூர்த்தி ஆதலால் நகைத்தது எதற்கோவெனில் (i) இவ்வாறு மூடத்தனத்தால் திரிபுரம் நாசமாயிற்றே என்பது ஒன்று, (ii) நானென்னும் அகந்தை பெற்றுத் தம்மாலே திரிபுர சம்ஹாரம் ஆகுமென்று தேவர்கள் நினைத்தார்களே என்பது மற்றொன்று, (iii) கருணாநிதியாய், நன்மையன்றித் தீமை தாராத நமக்குத் திரிபுர சம்ஹார வேலை வைத்தார்களே என்பது வேறொன்று. இவ்வாறு பற்பல காரணங்களாலே நகைத்திருக்கலாமே யன்றி அழிப்பதற்காகச் சிரிக்க வேண்டியதே யில்லை. இதைத் திருநாவுக்கரசு நாயனார்,

"விரித்த பல்கதிர்கொள் சூலம்
வெடிபட தமருகங்கை
தரித்ததோர் கோல கால
பயிரவனாகி வேழம்
உரித்துமை யஞ்சக்கண்டு வொண்டிரு
மணியாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச்
செந்நெறிச் செல்வனாரே"

என்றார் ஆதலால் தீயவை யழிய தீய சக்திகள் உண்டாய் கருணாநிதி சன்னிதானத்தில் இரண்டும் மாளும் என்பது வெளியாகின்றது.

கம்பியற்ற தந்தியும், தேவசத்தியும்.

Wireless in relation to Divine Powers.

கடவுள் ஜோதி மயமென்றும் எங்கும் நிறைந்தவ பென்றும் சொல்லப்படுகின்றாரே, அப்படியாயின் நமது கண்ணுக்குப் புலப்படாத காரணம் என்னவென்பர் நாஸ்திகர். தற்காலத்தில் இயற்கைத் தத்துவ நூலில் ஒலி, ஒளி இவற்றின் இலக்கணம் எவ்வாறு நிரூபிக்கப்படுகிறதென்று ஆராய்ந்தால் இதற்கு விடை வெகு சுலபமாகப் பகரலாகும். உலகத்திலிருக்கும் ஒளிகள் பல. அவைகளில் காணப்படுவன சில.

உலகத்திலிருக்கும் ஒலிகள் பல. அவற்றிற் கேட்கப்படுவன சில. மிகவும் அந்தகாரமான அமாவாசை இரவில் இருட்டறையில் ஓடும் ஒரு கறுப்பு எலியை ஒரு பூனை மிகச் சுலபமாகப் பிடித்து விடுகிறது. நமக்கோ பக்கத்திலிருக்கிற வஸ்தும் இன்னதென்று தெரியவில்லை. ஏனெனில் சிறு ஒளி பூனையின் கண்ணுக்குப் போதுமானது; நமக்குப் போதாதது. ஒவ்வொரு ஒளியும் கண்ணைத் தாக்குவதற்கு முன் தரங்க அளவு இவ்வளவு இருந்தால் தான் இக் கண்ணைத் தாக்குமென்று அறிவியல் நூலார் கண்டு பிடித்தனர். அதாவது, வான வில்லில் காணப்பட்ட எழு வகை வர்ண வெளிச்சங்களில் வயலெட் (Violet) என்னும் ஒருவகை நீல முதல் இறுதியில் காணப்பட்ட சிவப்பு வரையிலுள்ள தரங்க அளவுகளே நமது கண்ணைத் தாக்கக் கூடியனவாம். இவ்விரண்டு அத்துக்களுக்கும் அப்புறப் பட்டவை நமது கண்ணைத் தாக்கா. தரங்க அளவுகள் 30 மைலிலிருந்து அங்ஸ்டிரம் (Angstrom Unit) யூனிட் என்று சொல்லப்பட்ட (1×10^{-8}Cm.) ஓர் அங்குலத்தில் 100 கோடியில் ஒரு பாகம் வரையில் பல வகுப்புக்களாய் நிற்கின்றன. முதல் வகுப்பு இக்காலத்தில் கம்பி யில்லாத் தந்தி என்று சொல்லும் (Wireless) மின்சாரத்தில் பயன்படுவது. இது ஓசையின் கோடியம்சப் பின்னமான பின்னத்தை உலகத்தில் எத்தலத்தினின்றும் எத்தலத்திற்கும் எடுத்துச் செல்லத்தக்கதாம். கம்பியில்லாத் தந்தி என்னும் கருவி பல பக்கங்களிலும் செல்லும் நாதத்தை ஒருங்கு சேர்த்து ஓசையாக்கி அவ்வோசையால் தந்தி சமாச்சாரம்போல் தெரிவிக்கும். கடலிடையும் மின்சாரத் தபால் பெறுகின்றோம். சுந்தரமூர்த்தி நாயனார் கடவுளை இயற்கைத் தத்துவ இலக்கணத்தில் துதி செய்யும்போது,

"நாதனை நாதமிகுந் தோசையதானவனை
ஞானவிளக் கொளி யாமூனுயிரைப் பயிரை
மாதனை மேதகு தன்பத்தர் மனத்துறையும்
பற்று விடாதவனைக் குற்றமில் கொள்கையனைத்
தூதனை யென்றனை யாடோழனை நாயகனைத்
தாழ்மகரக் குழையுந் தோடு மணிந்ததிருக்
காதனை நாயடியே னெய்துவ தென்று கொலோ
கார்வயல்சூழ்கானப் பேருறை காளையையே"

நாதம், ஓசை, ஒலி, என்றது மூன்று அந்தஸ்து. ஓசை என்பது சமீபத்தில் கேட்கக்கூடியது. டெலிபோனில் (Telephone) கேட்கக் கூடியது. ஒலி என்பது வெகுதூரத்தில் கேட்கக்கூடியது. ஓசை ஒலியுமே நம் காதுக்கு எட்டக்கூடியன.

ஓசையின் தரங்க அளவு குறையுமாயின் நமது காதுக்குக் கேளாது. ஒரு வெண்கல மணியை அடித்து விட்ட பிறகு நமக்கு ஓசை கேட்பதில்லை. ஆயினும் ஓசை நமக்குக் கேளாது விட்ட பொழுதிலிருந்து அரை நிமிஷம் பொறுத்து நமது காதை அம்மணியினிடம் வைப்போமானால் "உம்" என்கின்ற சிற்றோசை கேட்கலாம். ஒலியும் மிகப் பேரொலியாயின் நமது காதில் படாது. கோளங்கள் மிக வேகமாக ஓடுவதனால் பேரொலி கிளம்பினும், நமது காதில் விழுவதில்லை. எங்ஙன மெனின், சமுத்திரக் கரையில் வசிக்கும் பட்டினவர்களுக்குச் சதா சமுத்திர ஒலி தாக்கப்படுவதால் அவர்கள் அதை அறிவதேயில்லை. அது போல் நாம் சதா பெரிய ஒலியில் இருப்போமாயின் அந்த ஒலியின் அனுபோகமே யிராது. ஆதலால் நமது கண்ணுக்காகிலும், செவிக்காகிலும் ஏற்பட்ட அளவுகள் எவ்வளவோ அவ்வளவு தரங்கமுள்ள ஒளி, ஒலி, காணல் கேட்டல், கூடுமேயன்றி அவ்வளவுக்குச் சிறுத்ததும் பெருத்ததும் அறிய நமக்குப் புலன்களில்லை. பூனை காணக் கூடிய ஒளி நமக்குப் பயன்படாதெனின், ஓர் அணுவுக்குள் ஜொலிக்கும் ஒலியை நாம் காணக்கூடுமோ? அதே மாதிரியாகக் கோடி சூரியப் பிரகாசமான வஸ்துவை நாம் காணக் கண் உண்டோ? எங்கும் நிறைந்த கடவுள் ஜோதியாய் விளங்குவது உண்மையே. அச் சோதியைக் காண நமக்குக் கண்ணில்லாததால் அச் சோதி இல்லையென்று கொள்ளலாமோ? சம்பந்த மூர்த்தி நாயனார் கடவுளை அநுமானப் பிரமாணத்தில் காட்டலாகாதென்றார். ஏனென்றால் சிவ பெருமான் பிரத்தியக்ஷ உண்மை. அநுமானப் பிரமாணத்தில் காணலாகாது. அநுமானப் பிரமாணம் எப்பொழுது பயன்படு மெனில் "செய்மையிலுள்ள வஸ்து எது? என்று ஆராய்வதற்குப் பயன் படும். அண்மையில் பிரத்தியக்ஷமான வஸ்துக்கு அநுமானப் பிரமாணம் பொருந்தாது. தூரத்திலுள்ள மலையில் புகை காணப்படுவதால் நெருப்பு உண்டென்று அநுமானிக்கலாம். எதிரிலுள்ள தீக்கு என்ன அநுமானம் காட்டுவது? காணாதவர்கள் காணாதவர்களே, கண்டவர்கள் கண்டவர்களே.

"கூட்டினார் கிளியின் விருத்த
முரைத்ததோ ரொலியின் றொழிற்
பாட்டு மெய்சொலிப் பக்கமே
செலுமெக்கர் தங்களைப் பல்லறம்
காட்டியே வருமாசெலாங் கவர்கை
யரைக் கசிவொன் றிலாச்
சேட்டைகட் கெளியே னலேன்
றிருவால வாயர னிற்கவே"

சிவபெருமான் உண்டென்பதற்குப் பக்கம் அதாவது பக்ஷம் சொல்லுவதற்கு முடியுமோ?

புகலி வேந்தன் (சம்பந்தன்) சிவ பெருமானைப் பிரத்தியக்ஷத்தில் காண்கின்றேன், என்ன அத்தாட்சி வேண்டும் என்றார். சமணர் நெருப்பில் உமது தேவாரத்தை இடும் என்றார். இட்ட ஓலை பச்சென்றிருந்தது. ஏனெனில் நெருப்புக்கு அதைத் தாக்கும் சக்தி போய் சிவத்தன்மையாய் ஒழிந்தது. பச்சென்று காணப்படும் ஓலையும் நெருப்பின் குணம் பெற்றிருந்ததால் நெருப்பால் நெருப்பழியவில்லை. சமணரிட்ட ஓலை நீறாயிற்று. ஆதலால் பிரத்தியக்ஷத்திலிருந்த ஜோதியைக் கண்ட சம்பந்தர் நெருப்பின் குணத்தை மாற்றலானார். இதைச் சமணர்கள் நெருப்புக் கட்டுவித்தை யென்றார்கள்.

ஒரு குழந்தையானது கண்ணைத் திறந்து உலகத்தைப் பார்க்கும் போது எவ்வளவு ஆநந்திக்கிற தென்றும் பார்க்கலாம். எல்லாம் கடவுள் ஜோதியாகக் காணப்படும். அதனால் அது களிக்கிறது, நகைக்கிறது. நாமும், நாம் இருக்கும் தலம்விட்டு நூதன ஸ்தலந்திற்குப் போவோமாயின், அங்குக் காணும் தோற்றங்கள் நமக்கு ஆச்சரியமாகவே யிருக்கும். ஆனால் குழந்தை காணும் ஆச்சரியம் போல் அவ்வளவு உண்டாவதில்லை. ஏனெனில் குழந்தை வளர, வளர, உலகபாசத்தில் கட்டுப்பட்டு எங்கும் விளங்கும் பரம ஜோதியை மறக்கின்றது. ஊனக்கண் ஞானக் கண்ணுயின் அணுவுக்கு அணுவிலும் மகத்துக்கு மகத்திலும் இந்த ஜோதியைக் காணலாம். இன்றேல்,

"பரத்தை மறைந்தது பார்முதல் பூதம்"

ஆகையால் கடவுள் பிரந்தியக்ஷந்திலிருந்தும் நாம் காணுதிருப்பது நமது தோஷமேயாம்.

அனலும் அதன் தத்துவமும்.

முன்னரே ஒவ்வொரு பரமாணுவும் சிவசக்தி சொரூபமாய் விளங்குகிறதென்று கூறினேன். சிவந்தன்மையானது ஜோதிவடிவம். உஷ்ணம் இன்றேல் ஜீவன் இன்றாம். ஒரு மனிதன் இறந்தானென்பது உஷ்ணத்தாலே அறியப்படும். சாதாரணமான உஷ்ணம் நீங்க உயிர் நீங்குவதுபோல் எவ்வஸ்துவை எடுப்பினும் உயிரற்ற பதார்த்தமேனும் உஷ்ணம் முழுமையும் அற்றுவிடுமாயின் உருவே அற்றுவிடும். உஷ்ணமானது பனிக்கட்டியிலு முண்டு. பனிக்கட்டி உஷ்ண அளவைக் கருவியில் (Centigrade Thermometor) சைபர் காட்டும் ஆயினும் தற்கா

லத்தில் காற்றை நீராக்கி (Liquid air) இருக்கின்றார்கள்; அத்தகைய நீரில் ஒரு துண்டு பனிக்கட்டி போடுவோமானால் நெருப்புஇட்ட நீர் போல் அந் நீர் (Liquid air) கொதிக்கும். இதனால் பனிக்கட்டியும் உஷ்ணமுடையதென்று ஏற்படும். பனிக்கட்டி உறையும் நிலையிலிருந்து தண்ணீர்கொதிக்கும் நிலைவரை (From C. Centigrade-melting point office to 100· Centigrade Boiling point of water) நூறுபடிகள் இருப்பதுபோல் பனிக்கட்டி உரையும் நிலையின்கீழ் இரு நூற்று எழுபத்து மூன்று (273.C. absolute zero) படிகள் இருக்கின்றனவென இயற்கைத்தத்துவநூல் நிபுணர்கள் கூறுகின்றனர். இவ்விரு நூற்றுஎழுபத்து மூன்று படியிலும் ஒருவஸ்து இறங்குமாயின் அதன் உருவம் குணம் யாவும் போய் வஸ்துவே ஸ்தூலமாய் இல்லாமற்போய்விடும்.

ஸ்தூலத்தில் வஸ்து அழிவது உண்மை என்பதை ரேடியம் Radium) யுரேனியம் (Uranium) முதலான உலோகங்களால் நிரூபிக்கலாம். சக்தி குறையக் குறைய எவ்வஸ்துவும் அழிவு காலத்திற்குச் சமீபிக்கிறது. உயிருள்ள பொருளாயினும் சரி, உயிரற்றபொருளாயினும் சரி. சட்டம் ஒன்றே. சக்தியால் பொருள் நிலைப்பதும் பொருளைச் சக்திகள் அவாவுதலும் நம்முன்னோர் வேறு வகையால் மொழிந்தனர்.

> "சிவன் சத்தி தன்னை ஈன்றும
> சத்திதான் சிவத்தை ஈன்றும்
> உவந் திருவரும் புணர்ந்திங்
> குலகுயிர் எல்லாம் ஈன்றும்
> பவன் பிரம்மசாரி யாகும்
> பான் மொழிகன்னியாகும்
> தவந்தரு ஞானத் தோர்க்கு
> இத்தன் மைதான் தெரியுமன்றே"

என்றார் அருணந்தி சிவாசாரியார்.

ஓசையும் பண்ணும்

Sound & Music

உஷ்ணமானது சக்தி. அதுநவசக்தி என்றோம். இவ்வுண்மையே தழலாய்ச் சிவபெருமான் திகழ்கின்றாரென்று தேவாரத்தில் ஆங்காங்கு மொழியப்படும். உஷ்ணம் ஸ்தூல அணுக்களை உடைப்பதற்கும் கூட்டு

சர்க்கும் இன்றி அமையாத கருவி. இதுபோல் சூக்கும அணுக்களை உடைக்கவும் கூட்டவும் இரசாயத்துணை வேண்டும். பரமாணுக்களைப் பகுக்கவும் சேர்க்கவும் கருவியாது? இன்னும் ஐரோப்பிய அறிவியல் நூல்கள் கண்டுபிடிக்கவில்லை. ஆயினும் யுக்திக்குப் பொருத்தமான சுருதிகள் நமது சைவத்தில்உண்டு. அதாவது எவற்றாலும் ஆகாத காரியமும்தமிழ்ப் பண்ணால் ஆகுமென்பதே.

(1) சமணர் ஏவிய யானையை அப்பர் வெருட்டியது காந்தாரப் பண்ணாகும் (ii) விஷம் தீர்த்த பதிகங்களின் இசையாலேயே, அப்பரும் சம்பந்தரும் பாம்பால் இறந்தவர்களை எழுப்பினர். (iii) திருஞானசம்பந்தரும் தீயிலிட்ட தன் ஏட்டை உஷ்ணம் தாக்காதுபரமாணுக்களுக்கு உரம் (Tone) கொடுத்தது அவருடைய இசையே யாகும். இசையேகடவுள் வடிவம் என்று சம்பந்தர் கூறி யிருக்கிறார்.

"ஈறாய் முதலொன்றா
 யிருபெண்ணாண் குணமூன்றாய்
மாறா மறை நான்காய்
 வருபூதம் மவைவையைந்தாய்
ஆறார் சுவையேழோடிசை
 யெட்டுத் திசைதானாய்
வேறா யுடனானானிடம்
 வீழிம் மிழலையே"

"பண்ணும் பதமேழும்
 பலவோ சைத்தமிழவையும்
உண்ணின்ற தோர்சுவையும்
 முறுதாளத் தோலிபலவும்
மண்ணும் புனலுயிரும்
 வருகாற்றுஞ் சுடர் மூன்றும்
விண்ணும் முழுதானானிடம்
 வீழிம் மிழலையே." (ii)

நமது சித்தாந்தத்தில் மாத்திரம் அன்று. புராதீன கிரீக்கர் (Greeks) காவியங்களில், அப்பாலோ (Apollo–The Sun, God of Music) என்னும் பானுமூர்த்திதான் குழலூதி டிராய் (Troy) என்னும் பட்டணத்தை எழுப்பியதாகக் காண்கிறோம். பராசக்தியானது

பிரளய காலத்தில் சிவபிரானில் ஒடுங்கும்போது உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களும் சத்தியால் உண்டாகும் இயக்கமற்று அழியும். பிரமனும் மாள, விஷ்ணுவும் மாளத் தனியாய் நின்ற பரமன், மறுபடியும் உலகத்தை வெளியிற் கொண்டு வர என் செய்வாரென்பதைத் திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணலாம். பிரளயத்தை நீக்க அவர்கையில் வீணையன்றி வேறொரு கருவியுமில்லை. அதன் இசை தவிர வேறொரு துணையுமில்லை.

"பெருங்கடன் மூடிப் பிரளயங்
கொண்டு பிரமனும் போய்
இருங்கடன் மூடி யிறக்கு
மிறந்தான் களே பரமும்
கருங்கடல் வண்ணன் களே
பரமுங் கொண்டு கங்காளராய்
வருங்கடன் மீள நின்றெம்
மிறை நல்வீணை வாசிக்குமே"

முடிவுரை.

Conclusion.

ஆகையால் தற்காலத்தில் இயற்கைத் தத்துவ நூலில் மேற்கண்டவாறு மின்சார அத்தியாயத்திலும், ஒலி, ஒளி, ஓசை என்கின்ற அத்தியாயங்களிலும் ஏற்பட்ட நூதன ஆராய்ச்சிகள் சைவசமய உண்மைகளை நிலைநிறுத்திக் கொண்டு வருகின்றன. இப்போது இவ்வறிவியல் நூலுக்கும் சைவத் திருமுறைகளுக்கும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலுள்ள அவ்வளவு வேற்றுமை இல்லை.

சைவ சமயத்தை இயற்கைத் தத்துவ நூல் சமீபத்துக்கொண்டே வருகின்றது. இன்னும் பல அறிஞர்கள் இந் நூற்றாண்டில் ஆராய்ச்சிகளில் செல்லச்செல்ல சைவ மறைகளும் அறிவியல் நூலா? இயற்கைத் தத்துவ அறிவியல் நூல் சைவமறையா? என்னும் சந்தேகம் உண்டாக்கும் நிலைக்கு வருமென்று நம்புகின்றேன்.

(நவசக்தி.)

☛ எவ்விடத்தும் கொலை தீது.

நிர்வாகிகள் எங்கே?

சி. ராம. ராம.

இவ்வூரிலிருந்து எம்மால் முதலில் ஆரம்பிக்கப்பட்டு வெளி வந்த 'அருணகிரி' யினின்றும் நாம் விலகிக்கொள்ளப் பல்வேறு காரணங்கள் உண்டாகிவிட்டபடியால் நாம் இராஜீனுமா கொடுத்து விலகிக்கொண்டோம் என்பது அறிஞர்கள் பலரறிந்த விஷயம். 'அருணகிரி' எமது நிர்வாகத்தில் வெளிவந்த காலத்தில் சிறிது நஷ்டத்தில் அக்கம்பெனி வேலை செய்தபோதிலும் அக் கம்பெனி எம்மால் யாது காரணம்பற்றி நிறுவப்பெற்றதோ அதைச்செய்வ தில் நஷ்டம் யேதும் வந்தாலும் பாதகமில்லை என்ற கருத்துக் கொண்டு பத்திரிகையை நிறுத்திவிடாமல் பல முறை வெளிநாடு சென்று பலத்த பிரசாரஞ் செய்து 'அருணகிரி' யைநடத்திக் கொண்டே சென்றோம். ஆனால் பத்திரிகை நடத்துவதில் உள்ள பணச்செலவும் சிரமங்களும் அத் தொழிலி லீடுபட்டோர் க்கே நன்கு தெரியும். அந்நிலையில் அத் தொழிலை சிறிதுமறியாத ஓர் சிலரை முன்னுக்குக் கொண்டுவருவான் வேண்டி அவர்களின் கூட்டுறவு கொண்டு 'அருணகிரி'யை யாம் துவங்கினோம். அதில் வரும் வருமானத்தையும் செலவையும் ஒப்பிட்டுப் பாராமல் வரு மானத்தை மட்டுங் கருதி நாம் பெருத்த லாபத்தை அதன்மூல மடைவதாக உள்ளூர எண்ணிய ஒரு சிலரின் நிர்வாகத்தில் அதை விட்டுவிட்டு விலக எண்ணியே இராஜீனுமா செய்தோம். அவ்வண் ணம் இராஜீனுமா செய்யும்பொழுது நமக்கு அக் கம்பெனியில் ஆயிரத்திற்கு அதிகமான தொகைவரவேண்டி யிருந்தது அந்த நிலையில் எமது கணக்கை ஒழுங்காக முடிவு செய்யாமலும் கம்பெ னியின் வரவு செலவை செவ்வையாகக் கவனியாமலும் எம்பேரில் துவேஷ மொன்றே கருத்தாகக்கொண்டு ஏராளமான பணத்தை விரையஞ் செய்து மீண்டும் 'அருணகிரி'யை நடாத்தியவர்கள் தங் கள் காலம் எவ்வளவு தூரம் ஜயத்துடன்செல்லும் என்பதைக்கூட ஒரு சிறிதும் கவனியாமல் எம்மை தூஷிப்பதற்கென்றே சில பத் திரிகைகளை வெளியிட்டு அதில் பள்ளத்தூர் இராமநாதன் படலம் என்னும் படலம் போன்று பல்வேறு தலையங்கங்களிட்டு நிர்வாகிக ளென்றும் அகஸ்தியனென்றும் சுப்பிரமணியனென்றும் ஆசிரிய

னென்றும் அக் கம்பெனியில் நாமும் ஓர் நிர்வாகி என்பதை சிறி தும் கவனியாமலும் எம்மை பொருட்படுத்தாமலும் எழுதிவந்தார் களென்பது 'அருணகிரி'யின் வாசகர்கட்கு நன்கு தெரியும். அத் துடனில்லாமல் எமது இராஜீனமா கடிதத்தை வெளியிட்டு அத ற்கு சிற்றறிவுடையவனொருவன் வெளியிடும் ஓர் வியாக்கியானம் போன்றுகூட இல்லாமல் கண்டபடி வியாக்கியானஞ் செய்தும் தூஷித்தும் வந்தார்கள். ஆனால், இப்பொழுது அந் நிர்வாகிகள் எங்கே? 'அருணகிரி' எங்கே?

'அருணகிரி'யை எமக்குப்பின் நடாத்திய அன்பர் நல்லையா முதலியார் நல்லவரே யாயினும் அவசரகுணமும் பிறர் சொல்கேட் டலும் படைத்திருந்தபடியால் இக் காரியத்தில் எமக்கு விரோத மாக இறங்கி வேலைசெய்ய முன்வந்தார். எமது இராஜீனமாவுக்கு வியாக்கியானஞ் செய்தார். இப்பொழுது நாம் எந்த இராஜீனமா கடிதத்தை எம்முறையில் எழுதினேமோ அதற்கே ஓர் நகல் எடு த்து அனுப்பினற்போல அதே போல் பணக்கஷ்ட மிகுதியாலும் வெளி நாடு செல்லவேண்டி யிருப்பதாலும் இராஜீனமா செய்கிறே னென அவரும் இராஜீனமா செய்துவிட்டார். நாம் வெளி நாடு செல்ல வேண்டுமென எழுதியபொழுது லண்டனே பாரிசோ செல்லப் போகிறார் என எழுதிய நமது அன்பர் முதலியார் இப் பொழுது அமெரிக்கா செல்லப் போகிறார் போலும். நிற்க, எம்மி டம் 'அருணகிரி' இருந்தபொழுது சிறிது நஷ்டத்திலேனும் கம் பெனி ஒழுங்காக நடந்துவந்தது. ஆனால் இப்பொழுது அன்பர் நல்லையா முதலியாரோ கம்பெனியையே படுகுழியில் வீழ்த்தி விட் டார். 'அருணகிரி'யையும் நிறுத்தி விட்டார். தானும் தனக்கு ஆயிர த்திற்குமேல் வரவேண்டுமெனச் சொல்லுகிறார். எம்மிடமிருந்து கம்பெனியை அவர் ஒப்புக்கொள்ளும் பொழுது எல்லா சாமான் களையும் சரியாக ஒப்புக்கொண்டு யாவற்றிற்கும் கையெழுத்திட்டு ரசீது தந்துள்ளார். இப்பொழுது அவர் இராஜீனமா ஒப்புக்கொள் ளப்பட்டபோதிலும் கணக்கு சாமான்வகையறுக்களை இன்னும் ஒப்புவிக்கவில்லை. அதற்குப்பிறகு ஓர் தேதி குறிப்பிடப்பட்டுள் ளது. அவரிடம் வேலைக்கமர்ந்து இத்தனை கோலாகலஞ் செய்த அகஸ்தியனென்ற சுப்பிரமணியனே முன்போல் இவ் வூரினின் றும் ஓட்டம் பிடித்துவிட்டான். முன்னமேயே ஓர் முறை 'அருண

கிரி'யில் அன்பன் பாலேயாவுடன் சுப்பிரமணியன் செய்த திருவிளையாடல்களை நாம் எழுதியுள்ளோம். அதையும் மறந்து எம்மைப் பேயனுயும் ஐயனை உண்மை யன்பனுயும் எண்ணிய உள்ளூர் வாசிகளும் ஏனையோரும் இப் பார்ப்பனின் சூழ்ச்சியை இன்றேனும் கண்டு உண்மை உணர்வர் என எதிர்பார்க்கிறேம். இந்நிலையில் 'அருணகிரி'யை நிர்வகித்து எம்மை தூஷித்த நிர்வாகிகள் இப்பொழுது எங்கே? இனி என்னசெய்ய விருக்கிறர்களென்பதை சிறிது காத்திருந்து கவனிப்போம். எது எவ்வாருயினும் நாம் அதை விட்டு வெளிவந்த பின்னர் அவர்கள் எழுதியதேபோல் சத்தியமே வெல்லும். உண்மையே ஓங்கும். என்ற நிச்சயம் மட்டும் நமக்கு என்றும் உண்டு.

மானேஜர் அறிக்கை.

நமது 'நவமணி'யை உள்நாடு வெளிநாடு அன்பர்கள் பலருக்கும் இதுகாறும் அனுப்பிவந்தும் அவர்கள் தங்கள் சந்தாத் தொகையை யனுப்பாததால் சிலருக்கு அடுத்த மணியை வி. பி. யிலனுப்ப எண்ணியுள்ளோம். தயவு செய்து வி. பி. யைத் திருப்பி விடாமல் ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேம்.

வெளிநாட்டில் வி- பி. யனுப்பக்கூடாத ஊரிலுள்ளவர்களும் வி. பி. யில் பெறுவதால் வீண் செலவு உண்டாகிறதென்ற எண்ணமுள்ளவர்களும் அந்தந்த ஊர் கரன்சிநோட்டோ தபால் முத்திரையோ அனுப்பினும் அதைப் பெற்று வரவு வைத்துக் கொண்டு பத்திரிகையைத் தவருமல் அனுப்பி வருவோமென்பதை அறிவித்துக்கொள்கிறேம்.

வெளிநாடுகளில் நவமணிக்கு சந்தா சேர்க்கவும், விளம்பரஞ் சேகரிக்கவும் ஏஜண்டுகள் தேவை. தகுந்த கமிஷன் கொடுக்கப்படும். விருப்பமுள்ளோர் மனுச்செய்து கொள்ளவும்.

நூறு வயது.

திரு. பி. ஸ்ரீ. ஆச்சாரியார் அவர்கள் எழுதுவது.

பிரான்சு தேசத்தில் அலெக்ஸாந்தர் கேன்லாட் என்னும் பெயர் வாய்ந்த ஒரு வைத்திய நிபுணர் இருக்கிறார். அவருக்கு இப்போது வயது 98 அவர் இன்னும் வைத்திய சாஸ்திர ஆராய்ச்சி செய்தவண்ண மாகவே யிருக்கிறார். நீண்ட ஆயுள் அடையும் முறையைக் குறித்து அவர் ஒரு பெரு நூல் எழுதிவருகிறார். இந்நூல் இப்பொழுது முடிவு பெற்று வருகிறது. இவர் வெள்ளைத்தாடியும் வாலிப ஊக்கமும் உற்சாக முமுள்ளவராகக் காணப்படுகின்றனராம். சுமார் 55-வயதுள்ளவராக மதிக்கத்தக்க நிலையில் இருக்கிறார். கண்களும் காதுகளும் நன்றாகத் தொழில் செய்து வருகின்றன. முகத்தில் வயதும் கவலையும் கிழித்த கோடு—மடிப்பு—கீறல் இல்லை. அவர் ஆனந்தமாகச் சிரிக்கும்போது, அவரது இயற்கைப் பற்கள் நன்றாக அமைந்திலங்குவதைக் காணலாம்.

இவ் வைத்திய நிபுணரைச் சந்தித்து உரையாடிய ஒரு பத்திரிகை நிருபரிடம், அவர் 'இயற்கை—மனிதனது இயற்கை—வயது நூறு' என்று அழுத்தமாகக் கூறினார். ஆரோக்கியமுள்ள பெற்றோருக்குப் பிறந்து ஆரோக்கிய வாழ்வு நடத்தும் ஒருவன் அல்லது ஒருத்தி நூறு வயது வாழ்வதில் வியப்பொன்றுமில்லை யென்பது இவர் கொள்கை.

நல்லுணர்வும் நல்லுணவும்.

ஆரோக்கிய வாழ்விற்கு நல்லுணவு இன்றியமையாதென்பதை அனைவரும் அறிவர். எனினும் முதற் கண் வேண்டுவது நல்லுணர்வு—நல்லெண்ணம்—நல்விருப்பம் அடுத்தபடியாகவே நல்லுணவு அவசிய மாகும். இவ்வுணவு—விஷயமும் அவரவர் விருப்பத்தைப் பொறுத்த தாகவே யிருத்தல் வேண்டும் என்றும், எத்தகைய உணவு வேண்டும் என்பதைக்காட்டிலும் எவ்வளவு உணவு வேண்டும் என்பதே அதி முக் கியமான கேள்வியாகுமென்றும் மேலே குறித்த வைத்திய நிபுணர் கருதுகிறார். 'உனக்கு எது நல்லதென்று தோன்றுகிறதோ, அதைச் சாப் பிடலாம்; ஆனால் அளவறிந்து சாப்பிடுதல் வேண்டும்' என்பது அந் நிபு ணர் கூற்று. 'அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் விஷம்' என்று தமிழர் பன்னெடுங்கால அனுபவத்தின் பயனாகக் கண்டறிந்த உண்மையினையே பிரஞ்சு நிபுணரும் இந்நாள் வற்புறுத்துகின்றார்.

தூய உணவு.

ஆகாரம், சாதன உயிர்ச்சக்தியும்உரமும் தரக்கூடிய—ஆகாரம் மாக இருத்தல் வேண்டும் என்று கூறும் நமது மருத்துவ நிபுணர்; வெண்ணெய் காய்கறி கனிவகைகள் முதலான 'சத்துவ' உணவுப் பொருள்களை உட்கொள்வதோடு, அவர் முட்டைகளையும் மிக மிகக் குறைந்த அளவில் ஊனுணவையும் உட்கொள்ளுகிறார். மிதமாக மதுபானமும் செய்கிறார். நம செந்தமிழ்ப் பெரியோரோ, மதியைச் சிதைக்கும் மதுவகைகளையும் ஊனைப்பெருக்கும் ஊனுணவையும் அறவே ஒழித்து காய் கனி கிழங்கு முதலான தூய உணவுப் பொருள்களால் உடம்பை வளர்த்தலே உயிரை வளர்த்தலுமாகும் என்று நீண்ட அனுபவ வாயிலாக உறுதி கூறியுள்ளார். இவ்விஷயத்தில் நம் முன்னோர் கண்ட அநுபவ உண்மையே, நமது சீதோஷ்ண நிலைக்கும் நாகரிக நிலைக்கும் பெரிதும் பொருந்துவதாகும்.

பிராணயாமம்.

அன்னமய கோசமாகிய உடம்பை வளர்ப்பதற்கு அன்னம் (உணவு) முக்கியமானதென்று கண்ட நம் முன்னோர், உடம்பையும் உயிரையும் ஒருங்கே வளர்ப்பது மூச்சுக் காற்றென்றும் தக்க முறையில் மூச்சை இழுத்து உள் அடக்கி வெளியே விடும் பயிற்சி இன்றியமையாததென்றும் கண்டுகொண்டனர். ஒவ்வொரு மூச்சின் வாயிலாகவும் சரியான அளவிற் காற்று உட்புகுதல் வேண்டும். இத்தகைய பயிற்சிக்கு நம்மவர் 'பிராணயாமம்' என்று பெயர் தந்திருக்கின்றனர். உடற் பயிற்சி முறைகளோடு கலந்த பிராணயாம முறையே சிறந்ததென்பது பிரஞ்சு நிபுணர்—கருத்து. கண்டபடி, வழிதுறை யறியாது, பழைய பிராணயாம முறைகளில் பழகுவது நன்றன்று. பொதுவாக, இத்தகைய பயிற்சிகளுக்கு நாட்டுப்புற வாழ்வு அவசியமாகும்.

இல்லறமல்லது நல்லற மன்று.

இல்லற வாழ்வே மனிதனது இயற்கை வாழ்வு. இல்லறவாழ்விலிருந்துகொண்டே கற்பும் காவலும் மேற்கொண்டு வாழ்வோர், நீண்ட காலம் வாழ்வர். வயது ஏற ஏற, உள்ளத்தில் விவேக வைராக்கியத்தைப் படிப்படியாக வளர்த்து தியாக உணர்வு பெறும் இல்லற வாழ்வினும் சிறந்த சுகவாழ்வு வேறொன்றுமில்லை. 'இல்லறமல்லது நல்லறமன்று' என்றும் 'உள்ளத்துறவே உண்மைத்துறவு'—என்றும் தமிழர் காட்டும் உண்மைகளைச் சமரசப்படுத்தி ஒழுகுவது நூறு வயது வாழ்வதற்குரிய இராச நெறியாகும் என்பது பிரஞ்சு நிபுணரது தேர்ந்த கொள்கையாகும்.

———

நவமணி.

நமது நவமணிக்கு வருட சந்தா ரூபாய் ஒன்றே! யாவரும் பெற்று நவமணியைப் படித்துப் பயன்பெற இதுவே சமயம். இச் சமயம் தவறினால் ஒரு வருடம் நவமணி பெறும் அதிர்ஷ்டம் உங்களை விட்டகலும். எனவே உடனே நவமணிக்கு ரூபாய் ஒன்று மணியார்டர் செய்யுங்கள்.

நவமணி சந்தாதார்களாக 6 பெயரைச் சேர்த்து ஒரே தடவையில் நமது காரியாலயத்திற்கு ரூபாய் அனுப்பும் அன்பர்களுக்கு ஒரு வருட நவமணி சந்தா இல்லாமலே இனாமாக அனுப்பப்படும்.

சந்தா விபரம்.

உள்நாடு வருட சந்தா	...	ரூ.	1—0—0
வெளிநாடு ஷை	...	ரூ.	1—8—0
தனிப்பிரதி ஒன்றுக்கு	...	ரூ.	0—1—0

விளம்பர விகிதம்.

முழுப் பக்க விளம்பரம்	தடவை	ஒன்றுக்கு	ரூ.	4—0—0
அரைப்பக்க	,,	,,	ரூ.	2—8—0
அட்டை முழுப் பக்கம்	,,	,,	ரூ.	5—0—0
,, அரைப் பக்கம்	,,	,,	ரூ.	3—0—0

முன்பணமனுப்பவேண்டும்.

மானேஜர்,
நவமணி பத்திரிகாலயம்,
பள்ளத்தூர்.
(இராமனாதபுரம் ஜில்லா

ரூபாய் 500 இனும்!

எப்படி?

விபரம் தெரிய ½ அணு ஸ்டாம்பும் விலாசமும் அனுப்புங்கள்.

கே. எஸ். முத்தையா கம்பெனி.
தபாற் பெட்டி 99,
சென்னை.

நீண்ட உழைப்பு! சரசவிலை!!

எது?

திருச்சி, மதுரை, பள்ளத்தூர், சென்னை முதலிய பல இடங்களிலுள்ள P. S. நடேசன் கம்பெனியார் வியாபாரஞ் செய்யும் டங்ஸ்ராம் என்னும் எலக்டிரிக் பல்ப்.

T. R. அரெங்கசாமி
செட்டிநாட்டுப் பிரதிநிதி,
P. S. நடேசன் அண் கோ.
பள்ளத்தூர்.

ஆச்சரிய குணம்! நல்ல மணம்!!

எது? மணிரசம்.

எங்கள் கம்பெனியில் உயர்ந்த திராவகங்களைக் கொண்டு தயாராகும் மணிரசம் என்னும் காந்த சத்துள்ள மருந்து.

புட்டி ஒன்னுக்கு ரூ. ... 1—8—0

உடனே ஆர்டர் செய்யுங்கள்.

மானேஜர்
மணிஔஷதாலயம்,
கொத்தமங்கலம்,
இராமனாதபுரம் ஜில்லா.

Printed and Published by S. RM. Ramanatha Mudaliar at Vedhambal Press, Pallatur. (Ramnad Dt.)